செ.வெ.எண்.41 நாள்.22.01.2018.

**திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு மாதாந்திர உதவித் தொகை வழங்குவதற்கான உத்தரவினையும், 9 மாற்றுத்திறனாளிகளுக்கு, உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவினையும் 2 நபர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

---

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சிமன்ற கூட்ட அரங்கில், மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (22.01.2018) நடைபெற்றது. பொதுமக்கள் ஏராளமானோர் கூட்டத்தில் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் கோரிக்கை மனுக்களை வழங்கினார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பாளையங்கோட்டை வட்டத்தில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 2 பயனாளிகளுக்கு முதியோர் மாதாந்திர உதவித் தொகை வழங்குவதற்கான உத்தரவினையும், நாங்குநேரி வட்டத்தில் 9 பயனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை பெறுவதற்கான உத்தரவினையும், அம்பாசமுத்திரம வட்டம் கீழ்குளம் கிராமத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து பணியிடை மரணமடைந்த நபரின் மகளுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையினையும், அம்பாசமுத்திரம வட்டம் அரிகேசவநல்லூர் கிராமத்தில் கிராம உதவியாளராக பணிபுரிந்து பணியிடை மரணமடைந்த நபரின் மனைவிக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணையினையும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இன்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து முதியோர் உதவித் தொகை, மாற்றுத்திறனாளிகள் உதவித் தொகை, முதிர்கன்னி உதவித் தொகை, விபத்து மரண உதவித் தொகை மற்றும் குடிநீர், சாலை வசதிகள் வேண்டி பல்வேறு மனுக்கள் பெறப்பட்டு, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் கொடுக்கப்பட்டு, பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், திருநெல்வேலி கோட்டாட்சியர் திருமதி.மைதிலி, சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.எஸ். சங்கரலிங்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு. பழனி குமார், அலுவலக மேலாளர் திரு.சிவகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.